அசல் வழக்கு எண். 118/2014 தேதி 20.03.2024

பி.வா.சா.1 - ராஜமாணிக்கம்

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனது தந்தை பெயர் திருமலை கொழுந்து (எ) திருமலைச்சாமி. எனது பாட்டா பொன்னுசாமிபிள்ளை. எனது தந்தையை மாணிக்கம் பிள்ளைக்கு தத்து கொடுத்தனர். பொன்னுசாமிபிள்ளை மனைவி சிறும்பாயி. அவர்களுக்கு சங்கப்பிள்ளை, வைரப்பெருமாள், திருமலை கொழுந்து (எ) திருமலைச்சாமி மற்றும் ரெட்டியாயி அம்மாள் அகியோர் மக்கள். அவர்களை நடுப்பண்னை என அழைப்பார்கள். எனது தந்தையை தத்து எடுத்த மாணிக்கம்பிள்ளை பொன்னுசாமிபிள்ளையின் தம்பி ஆவார். அவர் நடுப்பண்னை வகையை சார்ந்தவர். மாணிக்கம் பிள்ளை வடக்கு வீட்டு பண்னையை சேர்ந்தவர் இரத்தினம் பிள்ளை, சுந்தரம் பிள்ளை, முனியபிள்ளை ஆகியோர் வடக்கு வீட்டு பண்னையை சேர்ந்தவர்களா என்று எனக்கு தெரியாது. மாணிக்கம் பிள்ளையின் மனைவி மருதாயி அம்மாள் பெயரில் தாவா சொத்து இருந்ததா என்று எனக்கு தெரியாது. மருதாயிக்கு வைரப்பெருமாள், திருமலை கொழுந்து மற்றும் ராமாயி ஆகியோர்கள் வாரிசுகள். வைரப்பெருமாள் மகன் ராஜலிங்கம் மற்றும் அவரது மகன் சுரேஷ் ஆகியோர் தாவா சொத்தை வாதிகளுக்கு விற்றுள்ளனர்.

2. மாணிக்கம்பிள்ளையின் மகள் ராமாயின் மகன்கள் வாதிகள். பெரிய பண்னை மற்றும் சின்ன பண்னை என இரு குடும்பங்கள் உள்ளது. எங்கள் ஊரில் எங்கள் சமூகம் மற்றும் ரெட்டியார் சமூகம் அதிகமாக உள்ளனர். தாவா சொத்தின் தென்புறம் சின்ன பண்னை திருமலை கொழுந்து சொத்து உள்ளது. அதன் சர்வே எண்.694/1. அதற்கு தென்புறம் சதாசிவம் சொத்து உள்ளது. சதாசிவம் எனது பெரியப்பா சங்கப்பிள்ளை மகன் ஆவார். அதற்கு தென்புறம் எனது நிலம் இல்லை. அதற்கு தென்புறம் மாணிக்கம்பிள்ளை சொத்து உள்ளது. அதற்கு தென்புறம் உள்ள ராஜலிங்கம் இடத்தை கிரையம் கொடுக்கப்பட்டு காற்றாலை அமைக்கப்பட்டுள்ளது. காற்றாலைக்கு அமைக்கப்பட்ட கம்பி வேலிக்கு தென்புறம் சுமார் 30 முதல் 40 அடி மண்பாதை உள்ளது. மேற்படி மண்பாதை மேற்கே மதுக்கரை ரோட்டையும், கிழக்கே காளையப்பட்டி ரோட்டையும் இணைக்கிறது. மேற்படி மண்பாதை வழியில் பல காற்றாலை உள்ளது என்றால் சரியல்ல.

3. மேலே சொன்ன 5 நபர்களின் நிலங்கள் பட்டா நிலங்கள். ராஜலிங்கத்திடம் கிரையம் வாங்கி காற்றாலை அமைத்துள்ள இடத்திற்கு நேர் மேற்கே பொம்மு ரெட்டி குளம் உள்ளது. மழைக்காலத்தில் பொம்மு ரெட்டி குளத்திற்கு தண்ணீர் வரும். தாவா சொத்திற்கு வடக்கே உள்ள தார் ரோடு மதுக்கரைக்கு செல்வதாகும். பொம்மு ரெட்டி குளத்திலிருந்து தண்ணீர் வடக்கு நோக்கி வெளியே வருகிறது. புல எண்.690/1A ல் வடபுறம் இருந்து தெற்கு நோக்கி 20 அடி பள்ளமாக கிணறு உள்ளது என்றால் சரிதான். அதன் உட்பிரிவு தெரியவில்லை. மேற்படி கிணறு எனது தந்தை ,திருமலை கொழுந்து, மா.திருமலை கொழுந்து, நடராஜன், சுவாமிநாதன், ராஜலிங்கம் ஆகியோர் பெயரில் கூட்டுப்பட்டா உள்ளது. மேற்படி கிணறு ஆடு , மாடுகள் இறங்கி சென்று தண்ணீர் குடிப்பதற்கு வசதியாக அமைக்கப்பட்டுள்ளது.

4. கிணற்றிற்கு வடபுறம் கிழமேல் பாதை உள்ளது. சர்வே எண்.683 ல் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தகர செட் மாட்டு கொட்டகை அமைத்துள்ளனர். சர்வே எண்.690/3 ல் நான் தகர கொட்டகை அமைக்கவில்லை. கிணற்றிற்கு தென்புறம் விவசாய நிலங்கள் உள்ளது. கிணற்றிற்கு கிழக்கே சுவாமிநாதன் இடம் உள்ளது. அதை கிரையம் கொடுத்து வீடு கட்டியுள்ளனர். சுவாமி நாதன் கிணறு வரை காம்பௌன்ட் சுவர் அமைத்திருந்தார். மேற்படி காம்பௌன்ட் சுவரை ஒட்டி மேற்கே நான் தகர கொட்டகை அமைக்கவில்லை. அது புறம்போக்கு இடமாகும். மேற்படி புறம்போக்கு நிலத்திற்கு தென்புறம் சர்வே எண்.690/3A நிலம் உள்ளது. ஆடு மாடுகள் தண்ணீர் குடிக்கும் கிணற்றை வாரி கிணறு என அழைப்பார்கள். மேற்படி கிணறு கல்லால் கட்டப்பட்டு தற்போது தூர்ந்து விட்டது. அதன் மேல்புறம் சர்வே எண்.690/1A உள்ளது. அதன் மேல்புறம் உள்ள பகுதி 2 அடி உயரமாகவும், மேற்படி மேட்டுப்பகுதியில் தென்வடல் உயிர் வேலியும் உள்ளது.

5. அதன் மேல்புறம் பாதை உள்ளது என்றால் என் தோட்டத்திற்கு செல்வதற்கு நான் பாதை அமைத்துள்ளேன். மேற்படி பாதை சுமார் 10 அடி அகலத்தில் உள்ளது. மேற்படி பாதை நேராக 1 மற்றம் 2 பிரதிவாதிகள் வீட்டை நோக்கி செல்கிறது என்றால் சரிதான். 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வீட்டை ஒட்டி கிழக்கே 5 அடி உயரம் மற்றும் 60 அடி நீளத்தில் கல் கட்டு உள்ளது. மேற்படி சுவர் 1 அடி அகலம் இருக்கும். மேற்படி கல் கட்டு சுவர் ஆரம்பிக்கும் இடத்தின் வடபுறம் சர்வே கல் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே கல்லின் தென்புறம் உள்ள பகுதி வாதிகள் நிலமாகும். சர்வே கல்லின் கிழக்கே மரங்கள் உள்ளதா என்றால் சர்வே கல்லிருந்து மரங்கள் உள்ளது.

சர்வே கல்லிருந்து சுமார் 1 ½ அடி தெற்கே 6 அடி உயர ஏர் பைப் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஏர் பைப் குழாய் சுமார் 1 அடி அகலம் 1 அடி நீளம் உள்ள கட்டிடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி ஏர் பைப் குழாய் பூமிக்கடியில் உள்ள குழாயில் தண்ணீர் செல்வதற்கு அடைப்பு ஏற்படாமல் இருப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இதே போல் மற்றொரு ஏர் பைப் வாதிகள் நிலத்தின் வடகிழக்கில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ஏர் பைப் எனது இடத்தில் உள்ளது.

6. மேல்புறம் மற்றும் கீழ்புறம் உள்ள ஏர் பைப் குழாய்களுக்கு இடையே பூமிக்கடியில் தண்ணீர் செல்லும் இரண்டு குழாய் அமைக்கப்பட்டுள்ளது. கிணற்றிலிருந்து மேற்படி குழாய் வழியாக தண்ணீர் செல்கிறது. மேற்படி கிணற்றிற்கு என் தந்தை பெயரில் மின் இணைப்பு எண்.123 உள்ளது. என் தந்தை பூமிக்கடியில் குழாய் அமைத்தார். மேற்படி குழாய் மற்றும் ஏர் பைப் ஆகியவை வாதிகள் இடத்தில் உள்ளது என்றால் வாதிகள் மேற்படி நிலத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பாக பூமிக்கடியில் அமைக்கப்பட்டுள்ளது. என் தந்தை மேற்படி நிலத்தின் உரிமையாளரிடம் அனுமதி பெற்று குழாய் அமைத்தார். அதற்கு ஆவணம் எதுவும் இல்லை. சர்வே எண்.691/6 ல் என் தந்தைக்கு நிலம் உள்ளது. அதில் தண்ணீர் வசதி இல்லை. அந்த நிலத்திற்கு விவசாயம் செய்வதற்கு குழாய் வழியாக சர்வே எண்.690 ல் இருந்து கொண்டு செல்கிறோம்.

7. பூமிக்கடியில் அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் குழாய் சுமார் ¾ அடி முதல் 1 அடி விட்டம் இருக்கும். ஆட்கள் மூலமாக பூமியை தோண்டி மேற்படி குழாய் அமைக்கப்பட்டது. அதன் விவரம் எனக்க நேரடியாக தெரியும். 1973 ம் வருடம் சர்வே எண்.6912 மற்றும் 691/3 ஆகிய சொத்துக்களை என் தந்தை கிரையம் பெற்றார். மேற்படி சர்வே எண்.691/2, 691/3 மற்றும் 691/6 ஆகிய சொத்துக்களுக்கு குழாய் வழியாக தண்ணீர் பாசனம் செல்கிறது. வாரி கிணற்றின் மேல்புறம் உள்ள பாதை வழியாக வந்து மேற்படி குழாய்களை எடுத்து வந்ததும், ஆட்கள் வேலை செய்தார்கள் என்றால் சரியல்ல. மதுக்கரை சாலை வழியாக சர்வே எண்.696, 694, 695, 691 ஆகியவற்றின் வழியாக குழாய்களை எடுத்து வந்தனர். மேற்படி குழாய்களை வாரி கிணற்றின் மேல்புறம் உள்ள பாதை வழியாக எடுத்து வந்து ஆட்கள் வேலை செய்தார்கள் என்றால் சரியல்ல.

8. மேற்படி குழாய்கள் லாரி மூலம் எடுத்து வரப்பட்டது. வாரி கிணற்றின் மேல்புறம் உள்ள பாதையில் மட்டுமே லாரி வர முடியும் என்றும், மற்ற இடங்கள் விவசாய இடங்கள் என்றால் சரியல்ல. வாதிகள் இடத்தில் இரண்டு போர்கள் அமைத்துள்ளார்களா என்று தெரியவில்லை. வாதிகள் நிலத்தில் 5 அடி உயரத்தில் கருங்கல்லான தண்ணீர் தொட்டி அமைத்துள்ளனர். மேற்படி தண்ணீர் தொட்டி , போர்வெல் அமைப்பதற்கு வாரி கிணற்றின் மேல்புறம் உள்ள பாதை வழியாக பொருட்கள் எடுத்து வரப்பெற்றது என்றால் சரியல்ல. வாதிகள் தண்ணீர் தொட்டி மற்றும் போர்வெல் அமைப்பதற்கு எனது பெரியப்பா மகன் சதாசிவம் உதவியாக இருக்கவில்லை. வாதிகள் கிரையம் பெற்ற நிலத்தில் ஆதியில் தென்னம் பிள்ளை வைக்கவில்லை.

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.பாலமுருகன்

**Additional District Munsif,**
**Kulithalai.**